
CIBA Extension Series No. 33

# இறால் வளர்ப்பில் சிறந்த மேலாண்மை முறைகள்

## வரைபடக் கையேடு

முனைவர். (திருமதி) த. தெபோரால் விமலா
முனைவர். பி. ரவிச்சந்திரன்
முனைவர். மா. குமரன்
முனைவர். தி. ரவிசங்கர்
முனைவர். (திருமதி). பொ. மகாலட்சுமி




**அறிவுசார் ஊரக மேம்பாட்டிற்கான மின்னனு விரிவாக்க உத்திகள்**

**(நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்)**

ஆகஸ்ட் 2012

| | | |
|---|---|---|
| வெளியீட்டாளர் | : | **முனைவர். ஏ.ஜி. பொன்னையா**<br>இயக்குநர்,<br>மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம்,<br>சென்னை. |
| தொழில்நுட்ப ஆலோசனை | : | **முனைவர். கே.பி. ஜித்தேந்திரன்**<br>**முனைவர். கொ. அம்பாசங்கர்**<br>**முனைவர். இரா. சரஸ்வதி** |

CIBA Extension Series No. 33

# இறால் வளர்ப்பில் சிறந்த மேலாண்மை முறைகள்

## வரைபடக் கையேடு

உருவாக்கியோர் :

முனைவர். (திருமதி) த. தெபோராள் விமலா


முனைவர். பி. ரவிச்சந்திரன்

முனைவர். மா. குமரன்

முனைவர். தி. ரவிசங்கர்

முனைவர். (திருமதி). பொ. மகாலட்சுமி

**அறிவுசார் ஊரக மேம்பாட்டிற்கான**
**மின்னனு விரிவாக்க உத்திகள்**
**(நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்)**



குப்பா, சுப்பா, சீனு, வேணு ஊருக்குள்ளே போய் இறால் விவசாயிகளை அழைச்சுக்கிட்டு பஞ்சாயத்து ஆபீசுக்கு வாங்கப்பா
கந்தா நீ போய் 5 சேர் எடுத்துக்கிட்டு, 5 கூல்டிரிங்ஸ் வாங்கிகிட்டு வாடா



மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் அதாவது சிபா சென்னையிலிருந்து விஞ்ஞானிகள் குழு வந்து இறால் வளர்ப்பில் சிறந்த மேலாண்மை முறைகளை பத்தி சொல்லப் போறாங்க, அதுக்கு நம்மளும் ஒத்துழைக்கனுமுல
நமக்காக எம்மா தூரத்திலிருந்து வராக. கண்டிப்பா ஒத்துழைப்பு கொடுப்போம்னே.
எதுக்கு மணி அண்ணே? என்ன விஷயம்?



அன்பான இறால் விவசாயிகளே வளமான இறால் வளர்ப்புக்கு உதவவும், வெண்புள்ளி வைரஸ் நோய் வராமல் தடுக்கும் முறைகளை சொல்லவும் வந்திருக்கோம். உங்க சந்தேகங்களை எங்ககிட்ட கேட்டு தெளிவுப்படுத்திக்கங்க.
ஐயா வெண்புள்ளி வைரஸ் நோய் எது மூலமா பரவும்?



தரமற்ற இறால் குஞ்சுகள், இறால் வளர்ப்புக்கு பயன்படுத்தப்படும் தண்ணீர், தரமற்ற தீவணங்கள், உயிர்த் தீவனங்கள், பண்ணைக்குள்ள வரும் மாடு, நாய், பூனை, நண்டுகள், பறவைகள், பண்ணை வேலையாட்கள், பண்ணை கருவிகள், தொழில்நுட்ப ஆலோசகர்கள் மூலமாக பரவும்.
அப்ப எப்படித்தான் இறால்களை வளர்க்கிறது? ஒவ்வொரு காரியத்லையும் கவனமா இருக்கனுமுல.
இது சாத்தியமா?
100 சதவீதம் சாத்தியம், மனசு வைச்சா கண்டிப்பா பலன் கிடைக்கும்.
இது சாத்தியமா?
ஐயா குள பராமரிப்பு பத்தி கொஞ்சம் சொல்லுங்க?
ஐயா இறால் அறுவடைக்குப் பின்னால குளத்துல கருப்புமண் இருந்தா, அதை எடுத்து பண்ணைக்கிட்ட போட கூடாது. கொஞ்சம் தூரமாக போடவேண்டும்.



சார் கருப்பு மண்ணை எத்தனை அடி ஆழத்திலிருந்து எடுத்துப் போடனும்?
குளம் மட்டத்துல கருப்பு மண் எத்தனை அடி உள்ளதோ அவ்வளவையும் எடுத்துவிடுவது நல்லது.
ஐயா கருப்பு மண்ணை காயவைச்சுதான் எடுக்கனுமா?
காயவைச்சு, ஆள் மூலமாகவோ அல்லது மெஷின் மூலமாகவோ எடுக்கலாம். குளமட்டத்துல மேலும் இருக்கின்ற சிப்பி, ஆல்கே போன்றவற்றையும் எடுக்கனும்.
ஐயா மண்ணை ஆள் வைச்சு எடுக்கலாமா? இல்ல மெஷின் வைச்சு எடுக்கலாமா?
எத்தனை நாளு காயவைச்ச பொறவு கருப்பு மண் எடுக்கனும்?
சுமார் இரண்டு வாரம் காயவிடுங்க. pH அளவைப் பொறுத்து சுண்ணாம்பு போட வேண்டும். கண்டிப்பாக தேக்ககுளம் அதாவது ரிசர்வாயரை பயன்படுத்த வேண்டும். இந்த அட்டவணையில் pH அளவும் சுண்ணாம்பு விவரமும் இருக்கு.
சுண்ணாம்பு அளவு எவ்ளோ போடனும்?


தேக்க குளத்துல இருந்து வளர்ப்பு குளத்துல விழற தண்ணீருக்கு மெஷ் போடனுமாங்க? அளவு என்னாங்க சார்?
40 மெஷ் அல்லது 60 மெஷ் என்ற அளவில் போடனும். நீங்க ஆதாரத்திலிருந்து எடுக்கிற தண்ணில நோய் தாக்கிய மற்ற இறால்கள், மீன்கள் மற்ற விலங்கினங்கள் இருந்தாலும் அதை தடுக்கலாம்.
சார் ப்ளும் வர்றதுக்கு நிறைய மருந்துகள் கடையில விக்குறாங்க எந்த மருந்து போடனும்?
இறால் குஞ்சு விட்றதுக்கு 10 நாட்களுக்கு முன்னால் இரசாயன உரம் அல்லது தொழு உரம் போட்டால் தேவையான அளவு ப்ளும் கிடைக்கும்.
ஏன் சார் தரமான பொரிப்பகங்களிலிருந்து தான் இறால் குஞ்சுகள வாங்குறோம். அதனாலையும் பிரச்சனை வருதே ஏன்?
ஐயா பி.சி.ஆர். (PCR) சோதனைக்கு உட்படுத்தப்பட்ட இறால் குஞ்சுகளை மட்டுமே வாங்குங்க. மேலும் ஒரு தடவைக்கு இரண்டு தடவை வேற ஒரு பி.சி.ஆர் லேப்ல டெஸ்ட் பண்ணிக்குங்க.


நோய் தாக்காத தாய் இராலிலிருந்து வரும் குஞ்சுகள் தான் வாங்கனுமுனு சிபா வெளியிட்ட புத்தகத்துல எழுதி இருக்காங்கனு என் மகன் சொன்னானுங்க.
அவர் சொன்னது நூற்றுக்கு நூறு கரேக்ட்.
என்னதான் தரமான தாய் இறால் குஞ்சுகளை இருப்புச் செய்தாலும், முந்தைய இறால் வளர்ப்பில் சரியான மேலாண்மை செய்யாமல் இருந்தால் கண்டிப்பாக இறால்கள் பாதிக்கப்படும்.
அப்படியா மேடம்!
தண்ணீல 4 மணி நேரம் தீவனம் கரையாம இருக்கனும்னு எங்க எல்லோருக்கும் தெரியும். அது இல்லாம வேற ஏதாவது செய்தி இருக்கா சார்.
அது மட்டுமில்லங்க. சிப்பி, மட்டி போன்ற உயிர் தீவனங்களை பயன்படுத்தவே கூடாது.



தீவன மூட்டைகளை எத்தனை நாள் வரைக்கும் சேமிக்கலாம்?
ஒரு மாதத்துக்கு மேல சேமிக்க வேண்டாங்க. இல்லாட்டி தீவனம் பூசனம் பூத்து அதன் மூலம் இறால்களுக்கு நோய் வர வாய்ப்புள்ளது.
CIBA FEED
ஈரம் இல்லாத தரையில மரக்கட்டை வைச்சு தீவன மூட்டைகளை இதுபோல அடுக்கனும்.



சில இறால் ஒரு அளவும், சில இறால் வேற அளவும் வளருதே ஏனுங்க?
இறால்களில் வளர்ச்சி வேறுபாடு பல காரணங்களால் ஏற்படுது. நல்ல தரமான தாய் இறால்களிடம் இருந்து வந்த இறால் குஞ்சுகளையே இருப்புச் செய்யனும். அப்பத்தான் இந்த வளர்ச்சி வேறுபாட்டை குறைக்க முடியும். மேலும், உலர்ந்த சரிவிகித ஊட்டச்சத்து உள்ள தீவனங்கள்தான் கொடுக்கனும்.
தரமான இறால் குஞ்சுகளை இருப்புச் செய்து, சரியான அளவில் தீவனம் அளித்து, இறால் வளர்ப்பு மேலாண்மையை சரியாக கவனித்து வந்தால் இறால் வளர்ச்சி வேறுபாட்டை குறைக்க முடியும்



சோதனை தட்டு எத்தனை வைக்கனும் சார்?
ஒரு எக்டருக்கு 4 வைக்கனும், சோதனை தட்டுகளை பார்த்து தீவன நேரம், தீவனத்தின் அளவையும் எளிதாக கண்டுபிடிச்சிடலாம்.


சோதனை தட்லே எவ்வளவு தீவனம் வைக்கனும் சார்?
ஒரு சமயத்துல கொடுக்கபோற தீவன அளவில் சுமார் 2 சதவீதம் வைக்கலாம். அது தீவனம் எடுக்கிறதை பொறுத்து அடுத்த வேளை தீவனம் பற்றி தீர்மானிக்கலாம். இறால்களுடைய மொத்த எடையில 2 அல்லது 3 சதவிகிதம் தீவனம் கொடுக்கனும். 6 மணி நேரத்துக்கு ஒரு தடவை தீவனம் கொடுக்கனும்.
நீர் காக்கா, கொக்கு, ஆலா போன்ற பறவைகளால ரொம்ப தொந்தரவா இருக்குங்க சார்? என்னதான் செய்யறது?
சரியா கேட்டீங்க, பறவைகள் மூலமாகவும் நண்டுகள் மூலமாகவும் நோய் பரவ வாய்ப்பிருக்குது, அதனால பறவை வலை, நண்டு வலை இரண்டும் கண்டிப்பாக எல்லா பண்ணைகளிலும் இருக்கனும்.
ஒரு பண்ணையில நோய் வந்துட்டா அந்த பண்ணையில இருந்து வர்ற ஆளுக, வாங்குற பொருள்கள் எல்லாத்தையும் கண்டிப்பாக கிருமி நாசினி மூலம் சுத்தம் பண்ணனுமா சார்?
கண்டிப்பாக பண்ணனும். தொழில்நுட்ப ஆலோசகர்கள், பண்ணை வேலையாட்கள் யாராக இருந்தாலும் கை கால்களை கிருமி நீக்கம் செஞ்சுட்டு வரனுன்னு கண்டிப்பாக சொல்லிடனும்.
பண்ணையில நீங்க பயன்படுத்துற வலை, வாளி மத்த பொருட்களையும் கண்டிப்பாக கிருமி நீக்கம் செய்திட்டுதான் பயன்படுத்தனும்.


நோய் வந்தாதானே சார் கிருமி நீக்கம் செய்யனும்?
முன்னெச்சரிக்கையா எல்லா நேரங்களிலும் செய்யறது இரால்களை ஆரோக்கியமாக வைக்கும். நோய் வந்தா பார்க்கலாமுனு அசட்டையா இருந்துடக்கூடாது.
இரால்களை அறுவடை பண்ணியவுடன் எப்படிக் கையாளனும் சார்.
இரால்களை அறுவடை செய்த பிறகு நல்ல தண்ணியால் சுத்தப்படுத்தனும். பின்பு, இரால்களோடு ஐஸ்கட்டி வைச்சு பதப்படுத்தனும். ஏன் தெரியுமா? பாக்டீரியா தொந்தரவு இருக்காது. தரமும் பாதுகாக்கப்படும்.
பண்ணையில என்னென்ன செய்றோம்னு பதிவு பண்ணனுமா சார்?
தீவனம் என்ன போடுறோம்னு குறிச்சிருக்கோம். வேறு ஏதும் குறிக்கனுமா சார்?
இரால் குஞ்சு வாங்கின பொறிப்பகம், இருப்பு எண்ணிக்கை, தேதி, பண்ணையில பயன்படுத்திய ஈடுபொருட்கள் தீவன குறிப்பு, நோயின் அறிகுறி, நீர் மாற்றுதல், அறுவடைநாள், இரால் அளவு எல்லாத்தையும் குறிக்கனும். அப்பதான் திடீர்னு ஒரு நோய் வந்தாலும் குறிப்பை பார்த்து சரி செய்யமுடியும்.


உங்களுக்கு சங்கம் இருக்கா?
இறால்கள் நல்லபடியாக வளர்க்கவும் விக்கவும் சங்கம் கண்டிப்பாக உதவும்.
பெயரளவுல இருக்கு, செயல்பாடு இல்லீங்க!! சிலர் கேட்டு செயல்படுறாங்க, சிலர் ஒத்துழைக்க தகறாறு பண்றாங்க, ரொம்ப பேஜாராக இருக்கு சார்.


சங்கம் என்ன செய்ய முடியும் சார்?
கிராமத்துல உள்ள எல்லோரும் போய் இறால் குஞ்சு வாங்க முடியாது. ஆக உங்களுக்குள்ள 4 பேர் அல்லது 5 பேர் பொறுப்பெடுத்து இடுபொருட்கள் மொத்தமாக வாங்கினா போக்குவரத்து செலவு, அலைச்சல், நேரம் மிச்சமாகும், தரமும் நல்லா இருக்கும்.


ஐயா எங்க கிராமத்துல சிலர் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்துல பதிவு பண்ணலீங்க.
கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்திடம் கண்டிப்பா பதிவு பண்ணனும். அது அரசாங்க சட்டம். மீறக்கூடாது.


044-2461 0565
உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தாலோ, இரால் மேலாண்மையில் இன்னும் அதிகமான செய்திகள் தெரிஞ்சுக்க விரும்பினாலோ எங்கள் அலுவலக தொலைபேசியில தொடர்பு கொள்ளுங்க. சொன்ன செய்திகளை மறந்திடாதீங்க! எல்லாரும் இணைந்து ஒற்றுமையா செயல்படுங்க!
சிரமம் பார்க்காம தொலவுல இருந்து வந்து இரால் வளர்ப்பில் சிறந்த மேலாண்மை முறைகளை சொன்ன உங்க எல்லாத்துக்கும், சிபா நிறுவனத்துக்கும் மற்றும் இயக்குநர் அவர்களுக்கும் ரொம்ப நன்றிங்க. தொடர்ந்து ஒத்துழைப்பு கொடுப்போங்க.
ஒத்துமையாக செயல்படுவோம். உயர்ந்து காட்டுவோம்.
மிக்க மகிழ்ச்சி. நன்றி!!
வளங்குன்றா இரால்
வளர்ப்போம்!!
நோய் வரும் முன்
காப்போம்!!

# மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம்
(இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம்)

தலைமை அலுவலகம்

இயக்குநர்

மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம்

75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம்

சென்னை- 600 028.

தொலைபேசி: இயக்குநர் (நேரடி தொடர்பு) : 044 - 2461 7523

2461 8817

2461 6948

2461 0565

2461 1062

தந்தி : MONODON

தொலைநகல் : 91-44-2461 0311

மின் அஞ்சல் : director@ciba.res.in

இணைய வலைதளம் : www.ciba.res.in

முட்டுக்காடு பரிசோதனை நிலையம்

பொறுப்பு அலுவலர்

சிபா முட்டுக்காடு பரிசோதனை நிலையம்

கிழக்கு கடற்கரை சாலை, கோவளம் அஞ்சல்,

முட்டுக்காடு - 603 112. காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு

தொலைபேசி : 04114 - 2472344, 2472061

Silver Jubilee 1987-2012

காக்தீப் ஆராய்ச்சி மையம்
பொறுப்பு அலுவலர்,
சிபா காக்தீப் ஆராய்ச்சி மையம்
காக்தீப் - 743 347, மேற்கு வங்காளம்
தொலைபேசி : 03210 - 255072

